யாதும் ஊரே
யாவரும் கேளிர்

# வளர் தமிழ் ஆய்வு மன்றம்

திண்டுக்கல்

## இருபதாவது பன்னாட்டுக் கருத்தரங்கம்

### பங்கேற்புச் சான்றிதழ்

திருமிகு / முனைவர் / பேரா. இரா. பொன்னி

அவர்கள் 18 & 19-05-2024 ஆகிய நாட்களில் கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தோடு இணைந்து நடத்தப்பட்ட வளர் தமிழ் ஆய்வு மன்ற இருபதாவது பன்னாட்டுக் கருத்தரங்கில் பங்கேற்றார் / பங்கேற்று காலந்தோறும் சித்திரக்கவை வடிவம் என்னும் தலைப்பில் கட்டுரை வழங்கினார்.

தலைவர்

செயலாளர்

கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்

பொருளாளர்

Scanned with ACE Scanner

புலம் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்
Vol.4: Issue - S.4, May-2024
ISSN : 2583 - 0139

# சீர்மிகு வளர் தமிழ் ஆய்வு

யாதும் ஊரே
யாவரும் கேளிர்

## பதிப்பாசிரியர்கள்

முனைவர் ச.தங்கமணி
முனைவர் சி.மைக்கேல் சரோஜினி பாய்
முனைவர் தி.மே.சா.சந்திரமணி ஜெபராணி
முனைவர் தி.சாந்தி

PULAM: INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES
To Discern the Truth is Wisdom– Quarterly Journal

Scanned with ACE Scanner

வளர் தமிழ் ஆய்வு மன்றம், திண்டுக்கல்
புலம் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்
ISSN : 2583-6139
&
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்

இணைந்து நடத்தும்
பன்னாட்டுக் கருத்தரங்கம்
18, 19 மே 2024

பதிப்பாசிரியர்கள்
முனைவர் ச.தங்கமணி
முனைவர் சி.மைக்கேல் சரோஜினி பாய்
முனைவர் தி.மே.சா.சந்திரமணி ஜெயராணி
முனைவர் தி.சாந்தி

Scanned with ACE Scanner

17. பாரதியின் கவிதைகளில் புனைவியல் கூறுகளின் இழைவுகள்
முனைவர் ஆ.பூமிச்செல்வம் 59

18. தமிழ் வழியில் சிந்தித்தலின் இன்றியமையாமை
திரு பெ. க. பெரியசாமி ராஜா 63

19. தமிழ்ப் பண்பாட்டில் மாயர்கள்
திருமதி அ.பைசு நிஷா 65

20. காலந்தோறும் சித்திரக்கலை வடிவம்
முனைவர் இரா.பொன்னி 68

21. பத்துப்பாட்டில் இல்லறம்
முனைவர் ப.மகேஸ்வரி 72

22. திருமறையில் திருமால்
இரா. மஞ்சுளாதேவி
முனைவர் தி.மே.சா.சந்திரமணி ஜெபராணி 76

23. ஈழத்துப் புலம்பெயர் சிறுகதைகள் - ஓர் அறிமுகம்
நா.மணிகண்டபிரபு, முனைவர் ஆ.பூமிச்செல்வம் 81

24. பாரதியாரின் கவிதைகளில் காணலாகும் பக்தி உணர்வுக் கருத்துகள்
ச.மணிகண்டன் 84

25. ஊன் உடம்பே கோவில்
முனைவர் சு.மலர்விழி 88

26. தண்ணீர் தேசம் நாவலில் அறிவியல் பதிவுகள்
ரா. மாதவன் 92

27. அம்மன் வழிபாட்டு முறைகளில் தொல் எச்சங்கள்
மு.மாரியப்பன் 96

28. எஞ்சோட்டுப் பெண் கவிதைகளில் சமுதாயப் பார்வை
த. மார்கரெட் மாலதி 100

29. சங்கத் தமிழரின் வானியல் அறிவு
முனைவர் வே. மீனா 105

30. மரம் நடுவோம்! மக்களைக் காப்போம்!
முனைவர் சு.முத்து இலக்குமி 112

31. ராம்தங்கத்தின் ராஜவனம் நாவல் பேசும் சூழலியல் அழகும் அழிவும்
து.முத்துக்குமார் 114

32. கலகமொழி பேசும் தலித் கலை விழாக்கள்
ஊ.முத்துப்பாண்டி 116

33. சங்க இலக்கியப் பாலைத்திணைப் பாடல்களில் ஊடாடும்
உணவில் பண்பாட்டு அரசியல்
முனைவர் பெ. முத்துராஜ் 122

# காலந்தோறும் சித்திரக்கலை வடிவம்

முனைவர் இரா.பொன்னி, உதவிப்பேராசிரியர், பாத்திமா கல்லூரி, மதுரை.

உள்ளத்தெழுகின்ற உணர்ச்சியும், கற்பனைத்திறனும் கலந்த அழகின் வெளிப்பாடே கலை என்று கூறுவர். ஓவியம், சிற்பம், கட்டடம், இசை, கவிதை, நாடகம், நடனம் ஆகிய ஏழு கலைகளே நுண்கலைகள் (Fine Arts) ஆகும். இவற்றுள் ஓவியக்கலை காட்சிப்படுத்துவது. ஓவியம் 'பேசாத கவிதை' என்று கூறுவதும் பொருந்தும். பழங்காலத்தில் மக்கள் கண்ணால் கண்டவற்றையும், கற்பனையில் கண்டவற்றையும் அழகுணர்வோடு வண்ணம் தீட்டி ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாறைகள், மலைக்குகைகளில் வரைந்து வைத்திருப்பதாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுவர். "சித்திரம் பேசுதடி என் சிந்தை மயங்குதடிஞ்." என்னும் கு.ம.பாலசுப்பிரமணியனின் வரிகள் பேசாத கவிதையே ஓவியம் என்பதனை உணர்த்தும். மனதில் தோன்றும் எண்ணங்களின் காட்சிப்படிமமே ஓவியம். ஓவியம் மனிதனின் குறிக்கோள் உணர்ச்சியை நன்கு காட்டும் களமாகும் என்பார் அ.ச.ஞானசம்பந்தன். (அ.ச.ஞானசம்பந்தன் ,இலக்கியக்கலை ப. 82). இவை சுவர், துணி, ஓலைச்சுவடி, காகிதம், பலகை, சீட்டுக்கட்டு, செப்பேடு, கண்ணாடி, காக்காய்ப்பொன், யானைதந்தம் போன்ற பொருட்களில் வரையப்படுகின்றன.

ஓவியம் என்னும் சொல்லுக்கு தமிழ் இலக்கியங்கள் தரும் பெயர்கள்: ஓவு, ஓவம், சித்திரம், படம், படாம், வட்டிகைச்செய்தி ஆகியன. ஓவியம் என்ற சொல் 'ஒவ்வுதல்' எனும் பொருளினைக் குறிப்பதாகும். ஓவியம் வரைபவர்களை ஓவியர், வித்தகர், ஓவமாக்கள், கிளவிவல்லோன், கண்ணுள் வினைஞர், ஓவியப்புலவன், கம்மாளர், சித்திரக்காரர் என இலக்கியங்கள் விளிக்கின்றன.

**சித்திரமாடம்**

சித்திரம் என்பதற்கு 'வியப்பு' என்ற பொருளுண்டு. வியப்பிற்கு உரிய காட்சியாக பார்ப்பவருக்கு அமைவதால் 'சித்திரம்' என்ற பெயர் வந்ததாகக் கூறுவர். சங்ககாலப்புலவர் பெருஞ்சித்திரனார் தன் பாடல்களில் இயற்கை நிகழ்வுகள், வறுமைக்கோலம் என்பனவற்றை நம் மனக்கண்முன் சித்திரம் போன்று காட்சிப்படிமமாக்கிச் செல்வார். அதனாலேயே அவர் பெருஞ்சித்திரனார் என்று அழைக்கப்பட்டார்.

சித்திரங்கள் வரையப்பட்ட இடங்கள் சித்திர அம்பலம், சித்திரசாலை, எழுதுநிலை மண்டபம், ஓவக்கை வினைமாடம், சித்திரமாடம், சித்திரக்கூடம் என்றெல்லாம் அழைக்கப்படுவதாக பெருங்கதை கூறுகிறது.

பாண்டியன் நெடுஞ்செழியனை அடுத்து மதுரையை ஆட்சிசெய்தவன் பாண்டியன்நன்மாறன். சித்திரமாடத்தைப் பார்வையிட சென்ற இம்மன்னன் மாடத்திலேயே உயிர்விட்டதால் சித்திரமாடத்துத்துஞ்சிய பாண்டியன் என்றழைக்கப்பட்டான்.

பாண்டியனின் சித்திரமாடத்தை மாங்குடிமருதனார்,

"கயங்கண்ட வயங்குடை நகரத்துச்

செம்பியன்றன்ன செஞ்சுவர் புனைந்து" (மதுரை.484-485)

என்று பாடுகிறார். முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் 'சித்திரக்காரப்புலி' என்னும் பட்டம் பெற்ற பெருமைக்குரியவன்.

இன்றும் மதுரை மாநகரில் சித்திரக்காரத்தெரு என்ற ஒருதெரு உள்ளது. நாயக்கர் ஆட்சிக்காலத்தில் விசயநகரத்திலிருந்து வரவழைக்கப்பட்ட ஓவியக்கலைஞர்கள் இத்தெருவில் குடிவந்ததாகக் கூறப்படுகிறது. இவர்கள் அரண்மனை மற்றும் கோயிகளில் பணியமர்த்தப்பட்டனர். ஓவியத்திற்குத் தேவைப்படும் வண்ணங்களைக் காய்ச்சும் தொழிலில் ஈடுபட்டவர்கள்

Scanned with ACE Scanner